# World Mental Health Day

World Mental Health Day
10th October

## தேசிய மாற்றுத்திறனாளிகளின் மேம்பாட்டு நிறுவனத்தில் உலக மனநல நாளை முன்னிட்டு சிறப்பு கருத்தரங்கம்




சென்னை, அக்.18–

சென்னையை அடுத்த முட்டுக்காட்டில் இயங்கி வரும் மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டு நிறுவனத்தில் உலக மனநல நாள் நிகழ்ச்சி நடைபெற்றது. ஆண்டு தோறும் அக்டோபர் மாதம் 10ம் தேதி மனநல நாள் கொண்டாடப்படுகிறது. அதனையொட்டி அனைவருக்கும் மன ஆரோக்கியம் தரும் வகையில் இந்திய அரசின் கட்டுப்பாட்டில் சென்னை முட்டுக்காட்டில் இயங்கி வரும் ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோர் (NIEPMD) நிறுவனமும் மற்றும் மத்திய பிரதேசம் செஹோரில் இயங்கி வரும் மனநலம் மற்றும் மறுவாழ்வு தேசிய நிறுவனமும் இணைந்து இணையவழி கருத்தரங்கு ஏற்பாடு செய்திருந்தது. இந்த கருத்தரங்கை டாக்டர் பிரோபோத் சேத் இணை செயலாளர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு துவக்கி வைத்தார். ரவுத் (NIEPMD) இயக்குனர் ரக்ளிதோ உரையாற்றினார். நிகழ்ச்சியில் தொடக்க உரை நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் கார்த்திகேயன் மற்றும் ராஜேஸ் ராமச்சந்திரன்.